## உங்களது கூர்முனைப் பொருட்கள் ஒரு கடினமான பிளாஸ்டிக் கொள்கலனில் பாதுகாக்கப்படுவதை எப்போதும் நிச்சயப்படுத்திக்கொள்ளவும், உதாரணமாக:

✓ ஆஸ்திரேலிய தரநியம கூர்முனைப் பொருட்களுக்கான கொள்கலன்



✓ திருகாணி மூடியுடன் துளைக்க முடியாத பிளாஸ்டிக் கொள்கலன்



✗ கண்ணாடி மற்றும் காட்போட் பெட்டிகள் சிபாரிசு **செய்யப்படுவதில்லை**



✗ தகரப் பெட்டிகள் சிபாரிசு **செய்யப்படுவதில்லை**



✗ பிளாஸ்டிக் மென்பானம்/தண்ணீர் போத்தல்கள் சிபாரிசு **செய்யப்படுவதில்லை**



## உங்களிடம் இருக்கும் கூர்முனைப் பொருட்களைளங்கே அப்புறப்படுத்துவது:

பங்குகொள்ளும் மருந்தகங்கள்




வைத்தியசாலை




சமூக கூர்முனைப் பொருள் அப்புறப்படுத்தல்




## உங்களது கூர்முனைப் பொருட்களை அப்புறப்படுத்தமுடியாத இடங்கள்:



கூர்முனைப் பொருட்களை குப்பைத் தொட்டியில் வீசவேண்டாம்.

சிறந்த சேவைகளை வழங்குவதற்கு எமக்கு உதவும் முகமாக

**https://diabetesnsw.syd1.qualtrics.com/jfe/form/SV_0SARHeHYDObzo5T**

இல் கூர்முனைப் பொருட்களுக்கான ஆய்வினைப் பூர்த்தி செய்யவும்.

**ABN** 84 001 363 766

**தபால் விலாசம்**
GPO Box 9824,
Sydney NSW 2001

**உதவி அழைப்பு**
1300 342 238

2018 08 Safe Sharps Disposal Flyer_Tamil

# சர்க்கரை வியாதிக்கான கூர்முனைப் பொருட்களைப் பாதுகாப்பாக அப்புறப்படுத்துதல்

## நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டியவை



## சமூக கூர்முனைப் பொருட்கள் என்றால் என்ன?


வீடு அல்லது ஆஸ்பத்திரி போன்ற முறைசார் மருத்துவ சேவையாற்றும் வெளியிடங்களில் பாவிக்கப்படும் தோலுக்குள் செலுத்துவற்கான மருத்துவக் கருவிகள் சமூக கூரியபொருட்கள் எனப்படும்.

**அவற்றுள் அடங்குபவை:**

ஊசி மருந்துசெலுத்தும் குழல்கள்.



பேனா ஊசிகள்



ரணசிகிச்சைக் கத்திகள் (விரல் குத்தூசி)



இன்சுலின் செலுத்தும் பம்பித் தொகுதியின் கென்னுலா உட்செலுத்தல் ஊசிகள்



‘லிபிரே சுயாதீன ஒளித்தெறிப்பு கண்காணிப்பு கருவி’ (Libre Flash Freestyle Monitor equipment)



## எனது ‘சமூக கூர்முனைப் பொருட்களை’ நான் அகற்றுவது எவ்வாறு?

ஒரு பொருத்தமான கொள்கலனில் கூர்முனைப் பொருட்களை வையுங்கள். கீழுள்ள இடங்களில் மாத்திரம் ஊசிகள் அடங்கிய கொள்கலன்களை அப்புறப்படுத்தவும்:

- ✓ பொது வைத்தியசாலைகள்
- ✓ பங்குகொள்ளும் மருந்துச்சாலைகள்
- ✓ சமூக கூர்முனைப் பொருட்கள் வீசும் தொட்டிகள்

**சமூக கூர்முனைப் பொருட்களைப் பாதுகாப்பாக அகற்றுவது ஏனையோருக்கும், சுற்றாடலுக்கும் ஊறு விளைவிக்கும் அபாயத்தைக் குறைவடையச் செய்கிறது**



## எனது உள்ளூர் கூர்முனைப் பொருட்கள் வீசும் இடம் எங்குள்ளது?

சமூகத்தோர் தமது கூரியபொருட்களை வீசுவதற்கு உங்கள் அருகாமையில் இருக்கும் இடத்தைச் சரியாகக் கண்டறிய அல்லது மேலும் தகவல்களைப் பெற்றுக்கொள்ள, க்குப் போய்ப் பாருங்கள்.

safe sharps

**www.safesharps.org.au**

பாதுகாப்பான கூரியபொருட்கள் (Safe Sharps) இணையத்தளத்தில் தங்களுக்கு அருகாமையில் இருக்கும் பாதுகாப்பாக கூரியபொருட்களை அப்புறப்படுத்துவதற்கான இடங்கள், அவ்விடத்திற்குப்போவதற்கான வழிமுறைகள் மற்றும் அலுவலக நேரங்களை நீங்கள் பார்க்கலாம்.

**1300 342 238** இலும் Diabetes NSW & ACT ஐ அழைக்க முடியும் அல்லது மேலதிக தகவல்களுக்காக உங்களது உள்ளூர் கவுன்சிலை அழைக்கவும்

பெரியளவிலான கொள்கலன்களை ஏற்றுக்கொள்ளும் ‘உள்ளூர் அப்புறப்படுத்தும் இடவசதி’ யுடன் சரிபார்க்கவும்.

**diabetesshop.com** இடமிருந்து சமூக கூர்முனைப்பொருட்களை அப்புறப்படுத்தும் கொள்கலன்களின் ஒரு தொகுதியைப் பெற்றுக்கொள்ளலாம்.

## கூர்முனைப் பொருட்களை எவ்வாறு சேகரிப்பது:

✓ ஆஸ்திரேலிய தரநியம கூர்முனைப் பொருட்கள் கொள்கலன்



✓ திருகாணி மூடியுடனான துளைக்கமுடியாத பிளாஸ்டிக் கொள்கலன்

